**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti.**

**Deposition of Witness**

**C.C. 263 /2015**

**PW-2 13.03.2023**

| | |
|---|---|
| Name | ரவி என்ற ரவிச்சந்திரன் |
| Father's Name | சுப்பையா |
| Village | துறையூர் |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | -- |
| Calling | விவசாயம் |
| Religion | இந்து |
| Age | 53 |

(Accused absent. petition filed and allowed )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் துறையூரில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான வீடு கோவில்பட்டி சாய் சிட்டியில் இருக்கின்றது அதை வழக்கின் எதிரி செந்தில்குமார் 2011 ம் ஆண்டு வாடகைக்கு எடுத்திருந்தார். அவர் வாடகைக்கு எடுத்த பிறகு அவரை எனக்கு தெரியும்.

2. 17-7-2011 அன்று கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் இருந்து போன் வந்தது . எனக்கு சொந்தமான மேற்படி வீட்டில் பெண்கள் வைத்து எதிரி தொழில் செய்வதாக அது சம்பந்தமாக என்னிடம் விசாரணை செய்ய அழைத்தாகள். சம்பவம் நடந்தது பற்றி என்னிடம் கேட்டார்கள் எனக்கு நேரிடையாக அது பற்றி தெரியவில்லை. உடனே எதிரி செந்தில்குமார் வீட்டை காலி செய்து சாவியை என்னிடம் ஒப்படைத்துவிட்டார் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி செந்தில் குமார் எனக்கு சொந்தமான சாய் சிட்டி நகரில் உள்ள வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்பதற்கான வீட்டு வாடகை ஒப்பந்த பத்திரம் மற்றும் கிரய பத்திரம், தீர்வை ரசீது ஆகியவற்றை போலிசாரிடம் நான் தாக்கல் செய்யவில்லை.

2. வாடகை ஒப்பந்த பத்திரத்தை பார்த்தால்தான் எதிரி என் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

3. சொன்னது போல் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சாய்சிட்டி நகரில் எந்த வீடும் எனக்கு சொந்தமாக கிடையாது, போலிசார் தகவல் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல, எதிரி என் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

**என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு**

தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.